<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்</u>

**<u>OS.No. 247 / 2017</u>**

இந்நீதிமன்றத்து மூன்றாம் நிலை எழுத்தர் திருமதி. அம்பிகா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜுன் மாதம் 25 -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

தேதி - **25.06.2024**

பெயர் - மால்மருகன்

சாட்சி - DW1

விசாரணை தொடங்கும் நேரம் :- **11.30 AM**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :-

என்னுடைய முந்தைய சாட்சியத்தில் சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 25.12.2017 அன்று நடைபெற்ற தேர்தல் பற்றியும் தேர்தல் நடைமுறைவிதிகள் பற்றியும் எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் 12.08.2011 அன்று நான் வழக்கறிஞராக பதிவு செய்து கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளேன் அது இந்த வழக்கிற்கு சம்மந்தமற்ற சங்கதி என்று சொன்னால் அது தவறு நான் வழக்கறிஞர் என்பதால் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்பதால் அது பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன்.

நான் வழக்கறிஞர் என்பதால் அடிக்கடி இந்த வழக்கு விசாரணைக்கு வர முடியாது என்று தான் என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருக்க வேண்டுமே தவிர நான் வழக்கறிஞராக பதிவு செய்த தேதி பற்றி குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் அது தவறு. 21.05.2016 நான் ஆல் இந்தியா பார்கவுன்சில் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றேன் என்று குறிப்பிட்டுள்ளது இந்த வழக்கிற்கு தேவையற்ற சங்கதி என்று சொன்னால் அது தவறு நான் வழக்கறிஞராக பதிவு செய்து பின் மேற்சொன்ன தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றால் தான் வழக்கறிஞராக பணியாற்ற முடியும் என்பதால் தான் அதுபற்றி குறிப்பிட்டுள்ளேன்.

நான் தேர்தல் குழுவில் ஒரு பொறுப்பாளராக உள்ளேன் என்று சொன்னால் இல்லை. என்னுடைய முந்தைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் நான் தேர்தல் குழுவில் ஒரு பொறுப்பாளராக உள்ளேன் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் இல்லை. (வாதி தரப்பு வழக்கறிஞர் இந்த கேள்வி ஏற்கனவே சாட்சியிடம் முந்தைய குறுக்கு விசாரணையின் போது கேட்கப்பட்டது என்று தன்னுடைய ஆட்சேபணையை தெரிவித்தார் மேற்படி இந்த ஆட்சேபணையோடு இந்த கேள்வி பதிவு செய்யப்படுகிறது) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில வாதி தற்சமயம் சங்கத்தலைவராக இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். இதற்கு முன்பு வாதி சங்கத்தலைவராக இருந்தாரா அல்லது இல்லையா என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தற்சமயம் பாலு என்பவர் தான் சங்கத்தலைவராக உள்ளார் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் ஆமாம்.

மேற்சொன்ன பாலு 25.12.2017 சங்கத்தேர்தலுக்கு பிறகு தலைவராக உள்ளாரா என்றால் ஆமாம். வாதி தகுந்த பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று என்னைடைய பிரமாணவாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். வாதி நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோர முடியாது என்று என்னுடைய பிராமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். வாதி எனக்கு எதிராக மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும் என்னுடன் சேர்த்து 17 தேர்தல் பொறுப்பாளர்களான பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம்.

நானும் தேர்தல் பொறுப்பாளராக இருந்த காரணத்தினால் தான் எனக்கெதிராகவும் இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் தேர்தல் நடந்தது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது.

( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி குறுக்கு விசாணைக்கு வைக்கப்படுகிறது)

<u>விசாரணை முடியும் நேரம்</u>:- **.11.55 AM**